*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை*
*01 08 2026 SATURDAY 6.30 PM*
*மாநிலச்செய்திகள்*

*<u>தலைப்புச் செய்திகள்</u>*

*1) நாட்டின் இளைஞர்கள் உலகளாவிய வளர்ச்சிக்கு பங்களிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.*

*2) மத்திய அரசு தமிழகத்திற்கு 4 ஆயிரத்து 466 கோடி ரூபாய் வரிவருவாய் பங்குத் தொகையை கூடுதல் நிதியாக விடுவித்துள்ளது.*

*3) தமிழகத்தில் குடும்ப அட்டைதாரர்களுக்கான கைவிரல் ரேகை பதிவு சிறப்பு முகாம் நாளை நடைபெறுகிறது.*

*4) அதிக முதலீடுகளை ஈர்க்கும் மாநிலங்களின் பட்டியலில் தமிழகம் பத்தாவது இடத்திற்கு தள்ளப்பட்டிருப்பது அதிர்ச்சி அளிப்பதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.*

*5) காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் இந்தியா இன்று 3 தங்கப்பதக்கங்களை வென்றுள்ளது.*

*<u>இனி விரிவான செய்திகள் --</u>*

*<<<<<<<>>>>>*

*நாட்டின் இளைஞர்கள் உலகளாவிய வளர்ச்சிக்கு பங்களிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.*
*கர்நாடக மாநிலம் மைசூருவில் சுவாமி விவேகானந்தர் கலாச்சார இளையோர் மையத்தை இன்று தொடங்கிவைத்து பேசிய அவர், சுவாமி விவேகானந்தர் நாட்டின் ஆன்மீக வளர்ச்சிக்கு பெரும்பங்காற்றியவர் என்று கூறினார்.*
*அமெரிக்காவின் சிகாகோவில் நடைபெற்ற உலக ஆன்மீக மாநாட்டில் பங்கேற்பதற்கு முன்னதாக சுவாமி விவேகானந்தர் மைசூரு சென்றதை நினைவுகூரும் வகையில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.*

*<<<<<<<>>>>>*

*மத்திய அரசு ஒரு லட்சத்து 9 ஆயிரத்து 19 கோடி ரூபாய் மாநில அரசுகளுக்கு வரிவருவாய் பங்குத் தொகையை கூடுதல் நிதியாக விடுவித்துள்ளது.*

*இதுகுறித்து, மத்திய நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், வரும் 10-ஆம் தேதி வரிவருவாய் விடுவிக்கப்பட உள்ள நிலையில் முன்கூட்டியே இது இன்று விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*தமிழகத்திற்கு 4 ஆயிரத்து 466 கோடி ரூபாயும், உத்தரப்பிரதேசத்துக்கு 19 ஆயிரத்து 208 கோடி ரூபாயும், பீகாருக்கு 10 ஆயிரத்து 845 கோடி ரூபாயும், மத்தியப்பிரதேசத்துக்கு 8 ஆயிரத்து 10 கோடி ரூபாயும் விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*<<<<<<<>>>>>*

*தமிழகத்தில் குடும்ப அட்டைதாரர்களுக்கான கைவிரல் ரேகை பதிவு சிறப்பு முகாம் நாளை நடைபெறுகிறது.*
*இதுதொடர்பாக மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், மாநிலம் முழுவதும் உள்ள நியாய விலைக்கடைகளில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அத்தியாவசியப் பொருட்கள் அளிக்கப்பட்டுவரும் குடும்ப அட்டைகளில் உள்ள உறுப்பினர்கள் அனைவரும் e - Kyc கைவிரல் ரேகை பதிவை செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.*
*பணி நிமித்தமாக வேறு இடங்களுக்கு சென்றுள்ளவர்கள் அருகில் உள்ள எந்தவொரு நியாயவிலைக் கடையிலும் குடும்ப அட்டை எண்ணை குறிப்பிட்டு, கைவிரல் ரேகை பதிவை மேற்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

<<<<<<<<>>>>>

*தமிழகத்தின் பொருளாதாரத்தை வரும் 2030-ஆம் ஆண்டுக்குள் ஒன்றரை ட்ரில்லியன் டாலர் அளவுக்கு அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு மதன்ராஜா தெரிவித்துள்ளார்.*

*திருப்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த வளர்ச்சிக்கு சிறு-குறு நடுத்தர தொழில் நிறுவனங்களின் பங்களிப்பு முக்கியமானது என்று தெரிவித்தார்.*

<<<<<<<<>>>>>

*தொகுதி மறுவரையறை தமிழகத்தை கடுமையாக பாதிக்கும் என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி தெரிவித்துள்ளார்.*

*சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தொகுதி மறுவரையறையால் மக்களின் உரிமைகள் பறிக்கப்படும் என்று குற்றம் சாட்டினார்.*

*தொகுதி மறுவரையறைக்கு எதிராக அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும் என்றும் திரு ராகுல்காந்தி கேட்டுக்கொண்டார்.*

<<<<<<<<>>>>>

*அதிக முதலீடுகளை ஈர்க்கும் மாநிலங்களின் பட்டியலில் தமிழகம் பத்தாவது இடத்திற்கு தள்ளப்பட்டிருப்பது அதிர்ச்சி அளிப்பதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.*

*இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், மாநிலத்தில் ஆளும் தவெக அரசு கடந்த ஆட்சியை குறை கூறாமல் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு புதிய முதலீடுகளை ஈர்க்க உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.*

*பரந்தூர் விமான நிலையம் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் போக்கை கைவிட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளர்.*

*தமிழகத்தில் முதலீடு செய்ய வரும் நிறுவனங்களுக்கு, இணைப்பு வசதிகள், உள்கட்டமைப்பு, கடன்வசதிகள், மானியங்கள், சட்ட அனுமதி ஆகியவற்றை எளிதாக்க வேண்டும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.*

<<<<<<<<>>>>>

*கபினி அணை நிரம்பும் தருவாயில் உள்ளதால் காவிரியில் உபரிநீர் திறந்துவிடப்பட உள்ளதாக கர்நாடக முதலமைச்சர் திரு D K சிவகுமார் தெரிவித்துள்ளார்.*

*மைசூர் விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கபினி அணை முழு கொள்ளளவை எட்டும் நிலையில், நீரை தேக்கி வைக்க இயலாத நிலை உள்ளதாக கூறினார்.*

*மாநிலத்தில் போராடிவரும் விவசாயிகள் மற்றும் கன்னட அமைப்பினர் போராட்டத்தை கைவிட வேண்டும் என்றும் திரு D K சிவகுமார் கேட்டுக்கொண்டுள்ளார்.*

*இதனிடையே, காவிரி நீர்பிடிப்பு பகுதிகளான கேரளம் மாநிலம் வயநாடு உள்ளிட்ட பகுதிகளில் கனமழை பெய்துவருவதால் கபினி அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 40 ஆயிரம் கனஅடியாக உயர்ந்துள்ளது.*

*இந்நிலையில், காவிரியில் நீர்வரத்து படிப்படியாக அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

<<<<<<<<>>>>>

*கோவை மாவட்ட மலைப்பகுதிகள் நீலகிரி மற்றும் தேனி மாவட்டங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.*

*(Sound Byte – வி ஆர் துரை - 50 Sec.)*

<<<<<<<<>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

*நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் 3 கோடியே 59 லட்சம் ரூபாய் மதிப்பிலான கல்விக்கடன்களை மாநில அமைச்சர் திரு அருண்ராஜ் பயனாளிகளுக்கு இன்று வழங்கினார்.*

---------------

*தூத்துக்குடி மாவட்டத்தில் நீர்வழித்தடங்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில மீன்வளத்துறை அமைச்சர் திரு ஸ்ரீநாத் கூறியுள்ளார்.*

---------------

*வேலூர் மாவட்டம் தொரப்பாடியில் ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையத்தில் மாநில அமைச்சர் திரு வினோத் இன்று ஆய்வு செய்தார்.*

----------------

*தருமபுரி மாவட்டத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகளை ஆட்சியர் திரு சரவணன் இன்று தொடங்கிவைத்தார்.*

----------

*அரியலூர் மாவட்டம் கங்கைகொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் ஆலய வளாகத்தில் நடைபெறவுள்ள மன்னர் ராஜேந்திர சோழனின் பிறந்த நாள் விழாவிற்கான முன்னேற்பாட்டுப்பணிகளை ஆட்சியர் திருமதி மிருணாளினி ஆய்வு செய்தார்.*

---------------

*இராணிப்பேட்டை மாவட்டத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வு கூட்டம் ஆட்சியர் திருமதி ப்ரியா ரவிச்சந்திரன், தலைமையில இன்று நடைபெற்றது.*

--------

*மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு வரும் அலுவலர்களிடம் தேவையான தகவல்களை பொதுமக்கள் வழங்கி முழு ஒத்துழைப்பு தர வேண்டும் என்று மதுரை மாவட்ட ஆட்சியர் திரு நிஷாந்த் கிருஷ்ணா கேட்டுக்கொண்டுள்ளார்.*

*<<<<<<<>>>>>*

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

*காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் இந்தியா இன்று 3 தங்கப்பதக்கங்களை வென்றுள்ளது.*

*கிளாஸ்கோவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் குத்துச்சண்டை பிரிவில் மகளிர் 54 கிலோ எடைப்பிரிவில் Preeti Pawar-ரும், 57 கிலோ எடைப்பிரிவில் Jaismine-ம் தங்கப்பதக்கம் வென்றனர்.*

*பாரா குண்டு எறிதல் பிரிவில் Soman Rana தங்கப்பதக்கம் வென்றார்.*

*ஆடவர் குத்துச்சண்டை 55 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் Jadumani Singh வெள்ளிப்பதக்கத்தை வென்றார்.*

*பாரா குண்டு எறிதல் பிரிவில் Shubham Juyal வெள்ளிப்பதக்கம் வென்றார்.*

*Triple Jump பிரிவில் இந்தியாவின் பிரவீன் சித்திரவேல் வெள்ளிப்பதக்கத்தையும், செல்வப்பிரபு திருமாறன் வெண்கலப் பதக்கத்தையும் வென்றுள்ளனர்.*

--------------

*காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற இந்திய வீரர்களுக்கு குடியரசுத்தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் மற்றும் மத்திய அமைச்சர்கள் பலர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.*

------------

*கிருஷ்ணகிரி மாவட்ட உள்விளையாட்டு அரங்கில் மாநில அளவிலான இறகு பந்து போட்டி மற்றும் டேபிள் டென்னிஸ் போட்டி இன்று தொடங்கியது.*

*<<<<<<<END>>>>>*